‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ விழிப்புணர்வு பிரச்சார முயற்சி

(RADLD - RAISING AWARENESS OF DEVELOPMENTAL LANGUAGE DISORDER)

# பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு தகவல் அட்டை

2ம் பதிப்பு (மார்ச் 2021)

DEVELOPMENTAL LANGUAGE DISORDER (DLD) FACT SHEET

Version 2 (Updated March, 2021)

பேசக் கற்றுக்கொள்ளுதல். பேசுதல், பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவை சேர்ந்து ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி’ என்று அறியப்படுகிறது. இவற்றில் ஒரு நபருக்கு இருக்கும் குறைபாடு ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ Developmental Language Disorder (DLD) என்று அறியப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடுகளில் மிகச் சாதாரணமாக ஏற்படும் குறைபாடு ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ ஆகும்.

‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ Developmental Language Disorder (DLD) என்பது ஒரு புதிய பெயராகும். நாம் பல நூறு ஆண்டுகளாகவே இந்தக் குறைபாட்டைப்பற்றி அறிந்திருந்தாலும் அது வெவ்வேறு பெயர்களினால் அறியப்பட்டுவந்திருக்கிறது: ‘மொழியைப் பேசுதல் மற்றும் பேச்சைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் ஏற்படும் குறைபாடு’ expressive-receptive language disorder, ‘குறிப்பிட்ட மொழிக் குறைபாடு’ specific language impairment, ‘பேச்சு மற்றும் மொழிக் குறைபாடு’ speech-language impairment, ‘மொழித் தாமதம்’ language delay ஆகியவை அவற்றுள் சில பெயர்களாகும். ஆங்கிலம் பேசும் மக்கள்மத்தியிலே தற்போது வழக்கத்திலிருக்கும் பெயர்தான் ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ Developmental Language Disorder (DLD) என்பதாகும்.

## ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ (DLD) குறித்து நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய ஐந்து காரியங்கள்:

1. இது ஒரு மறைவான குறைபாடாகும். இந்தக் குறைபாடு உள்ளவர்களின் பேச்சில் பல தவறுகளிருக்கும். அவர்களால் மிக எளிய வாக்கியங்களை மட்டுமே பேசமுடியும். பிறருடன் ஓர் எளிய உரையாடலை நிகழ்த்தவே சிரமப்படுவார்கள். பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாட்டைப்பற்றின புரிந்துகொள்ளுதல் இல்லாதவர்களுக்கு அவர்களுடைய சிரமங்கள் புலப்படாது.
2. இந்தக் குறைபாடு குழந்தைப்பருவத்தின் துவக்கத்திலேயே தோன்ற ஆரம்பித்துவிடுகிறது. பெரியவராக வளர்ந்தபிறகும் தொடர்கிறது.
3. இந்தக் குறைபாடு உலகனைத்திலும், மொழி பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரையும் பாதிக்கின்றது.
4. ஓர் ஆராய்ச்சி முடிவின்படி, இந்தக் குறைபாடு 14 குழந்தைகளில் ஒருவர் என்னும் விகிதத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

5. இது அவசியம் கவனிக்கப்படவேண்டிய ஒரு குறைபாடாகும். இது ஒரு நபரின் சமூக ஆரோக்கியத்தையும், உணர்ச்சிகரமான ஆரோக்கியத்தையும், பள்ளி மற்றும் வேலையில் அவருக்குக் கிடைக்கவேண்டிய வெற்றியையும் பாதிக்கின்றது.

## ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ (DLD) க்கான காரணங்கள்:

- மரபியல் மற்றும் சுற்றுப்புற ஆபத்துகள் (Genetics plus environmental risks): ஒரு நபரின் மரபணுக்களில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றில் திடீர் மாற்றம் ஏற்படுவதால் மொழி வளர்ச்சிக் குறைபாடு ஏற்படலாம். இதற்குக் காரணமாயிருக்கும் மரபணுக்கள் எவையெல்லாமென்று விஞ்ஞானிகளால் இன்னும் தெளிவாய் கண்டறியப்படவில்லை. மரபணுக்கள் சூழ்நிலைக்கேற்ப தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அப்படியென்றால், மரபியல் அபாயங்களுள்ளவர்களுக்கு, சில சூழ்நிலைகளில், ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ காணப்படும் வாய்ப்பு கூடுதலாகவும், வேறு சில சூழ்நிலைகளில் குறைவாகவும் இருக்கலாம். மொழிவளர்ச்சிக் குறைபாட்டுக்குக் காரணமாய் அமையும் மரபியல் குறைபாட்டினால் சம அளவு பாதிக்கப்பட்ட இரண்டு குழந்தைகளைக் கற்பனை செய்துகொள்வோம். அவர்களில் ஒரு குழந்தை குறை மாதத்தில் பிறந்தது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தை கர்ப்பப்பையிலிருந்த நாட்கள் குறைவு என்பதனால் அதற்கு மரபியல் ஆபத்து கூடுதல் என்று புரிந்துகொள்ளலாம். மரபியல் மற்றும் சுற்றுப்புற ஆபத்து நிச்சயமாய் பாதிப்பை ஏற்படுத்துமென்று திட்டவட்டமாய் கூறிவிடவும் முடியாது. இந்தக் குறைபாட்டிற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான் என்று சொல்லிவிடமுடியாது, அல்லது, ‘மரபியல்’ மற்றும் ‘சூழல்’ ஆபத்துக்கள்தான் காரணம் என்றும் திட்டவட்டமாய்க் கூறிவிடமுடியாது. முக்கியமான இரண்டு காரியங்களை நாம் அறிந்துகொள்ளமுடிகிறது: 1. ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ குறித்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது இன்னும் ஏராளம் இருக்கிறது. 2. ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ க்குக் காரணமாயிருப்பது பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு போதுமான அளவு பேச்சு மற்றும் வாசிப்பு பயிற்சி கொடுக்காததினால்தான் என்று எண்ணுவது உண்மைக்குப் புறம்பானது.
- நரம்புயிரியல் (Neurobiology): மூளை வளர்ச்சியுடன் தொடர்புடைய வேறு பல குறைபாடுகளைப்போலவே, பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடும் மூளை வளர்ச்சியுடன் தொடர்புடையதுதான். ஆனால் மொழி வளர்ச்சிக் குறைபாட்டிற்கும் பிற குறைபாடுகளுக்கும் மிக நுட்பமான பல வித்தியாசங்களிருக்கின்றன.

  வழக்கமான ஒரு ஸ்கேன் பரிசோதனையிலே இந்த வித்தியாசத்தைக் கண்டுபிடித்துவிடமுடியாது. மூளையின் சாம்பல் பொருள் மூளையின் வெவ்வேறு பகுதிகளில் எந்தெந்த அளவிலுள்ளது என்பதைப்பொறுத்து இந்த வித்தியாசங்கள் அமைந்திருக்கும். பெருமூளை (Cerebrum) யில் சாம்பல் நிறத்திலமைந்திருக்கும் புறணி (Cortex) யில் பெருமூளையின் முற்பகுதி (Frontal Lobe), பெருமூளையின் இரு பக்கங்களிலுமிருக்கும் பகுதி (Temporal Lobes), மற்றும் மூளையின் அடிப்பகுதியிலுள்ள பேசல் கேங்கிளியா (Basal Ganglia) விலுள்ள ஸ்ட்ரயாட்டம் (Striatum) என்னும் பகுதி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது பாதிப்புகளும் காரணமாயிருக்கலாம்.

  பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளின் மூளை வளர்ச்சி பிற குழந்தைகளைவிட எப்படி வித்தியாசப்படுகிறது என்பதைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்னும் கண்டுபிடிக்கவேண்டிய காரியங்கள் ஏராளமிருக்கின்றன.

## பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாட்டுடன் தொடர்புடைய சிரமங்கள் (DLD Associated difficulties)

- வேறு குறைபாடுகளுடனுள்ள தொடர்பு: 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' இருப்பவர்களுக்கு சில நேரங்களில் கவனக்குறைவு மற்றும் உயர் செயல் திறன் குறைபாடு (ADHD), எழுத்து மயக்க நிலை (Dyslexia), கற்றல் குறைபாடு, தசை இயக்க வளர்ச்சி குறைபாடு (weakness in motor development) போன்ற வேறு குறைபாடுகளுமிருக்கலாம். ஆனால், 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' என்பது 'புற உலக சிந்தனைக் குறைபாடு' (Autism) அல்ல. எனினும், இந்த இரு குறைபாடுகளிலும் கண் அசைவு, உடல் அசைவு போன்ற, வார்த்தையில்லாத தொடர்புமுறைகளிலும் சிரமங்களிருக்கலாம். புற உலக சிந்தனைக் குறைபாடு (Autism) உள்ளவர்களில் காணப்படும் சில முக்கிய அறிகுறிகள் என்னவென்றால், இயற்கைக்குப் புறம்பான, மட்டுப்படுத்தப்பட்ட சில பழக்கங்கள், விருப்பங்கள், மற்றும் செயல்கள் அவர்களிடம் இருக்கும். ஆனால் இவை 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' என்னும் குறைபாட்டுடன் தொடர்புடையவையல்ல.
- மன ஆரோக்கியம் (Mental health): 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள குழந்தைகளுக்கு பிற குழந்தைகளைவிட அதிகமாக கவலை, மனச் சோர்பு போன்ற உள்நோக்கிய பிச்சனைகளும் முரட்டுத்தனமும் இருக்கும். அவர்கள் வளர வளர, இந்தப் பிரச்சனைகளும் அதிகரித்துக்கொண்டேபோகும். 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள பிள்ளைகள் தங்களுக்குள்ளே திட நம்பிக்கையையும் தெளிவான செயல்பாட்டையும் வளர்த்துக்கொள்வார்களானால் அவர்கள் நல்ல மன ஆரோக்கியத்துடனிருப்பார்கள்.

'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' ஏற்படுத்தும் விளைவுகள் (DLD outcomes):

- எழுத்தறிவு மற்றும் கல்வி சாதனை: 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' என்பது பேச்சு மொழியைப் பாதிக்கின்றது. அத்துடன், எழுதுதல், எழுத்து மொழியை வாசித்தல், எழுத்தாக்கம் (spelling) போன்ற பல திறமைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பொதுவாகவே, பேச்சு மொழியிலே நல்ல அஸ்திபாரமுள்ள குழந்தைகளுக்கு வாசிப்பதும், எழுதுவதும் எளிதாக வந்துவிடுகிறது. ஆனால் 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள குழந்தைகளுக்கு எழுத்து மொழிப் பிரச்சனைகள் அதிகம இருக்கும்.
- சமூக உறவுகள் (**Social relationships**): சக மனிதர்களுடன் நல்லுறவை வளர்க்க மொழித்திறன் இன்றியமையாதது. 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள குழந்தைகளுக்கு பேச்சுத்திறன் குறைவாக இருக்கும். சில ஆராய்ச்சி அறிக்கைகள் கூறுவதென்னவென்றால், 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' இல்லாத குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளை நன்றாயப் புரிந்துகொள்ளுவதால் அவர்கள் பிறரின் தாக்குதல்களுக்கு ஆளாவதில்லை, ஆனால் 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள குழந்தைகள் பிறரால் எளிதில் தாக்கப்படுகிறார்கள்.
- வேலை வாய்ப்புகள் (**Employment**): 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது, பிறருக்குக் கிடைப்பதைவிட குறைந்த அளவில்தான் அவர்களுக்கு முழு நேர வேலைகள் அல்லது திறமையான வேலைகள் கிடைக்கின்றன. அதேவேளையில், 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ளவர்களில் சிலர்கூட நன்றாகப் படித்தவர்களாகவும், நல்ல வேலைகளிலிருப்பவர்களாகவுமிருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். எனினும், தற்போதைய நிலையில், 'பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு' உள்ள மாணவர்கள் பலர் பள்ளியிலும் வேலையிலும் உயர்நிலைக்கு வரும்வகையில் அவர்களுக்குப் போதுமான ஆதரவும் ஊக்கமும் கிடைக்கவில்லையென்பதே நிதரிசனமான உண்மையாகும்.

‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ சரிசெய்வதற்கான சேவைகள் (DLD Services):

- நோய் கண்டறிதல் (**Diagnosis**): ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ குறித்து M R I ஸ்கேன் மூலமோ இரத்தப் பரிசோதனை மூலமோ கண்டறியமுடியாது. புாதிக்கப்பட்ட நபரின் படிக்கும் திறன், புரிந்துகொள்ளும் திறன், பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் பயன்படுத்துவதில் இருக்கும் திறன் போன்றவைகளை சோதிக்கவேண்டும். பரிசோதனையை நடத்துகிறவர் மொழித்திறன் குறித்த சில சோதனைகளை தொடர்ச்சியாக நடத்தவேண்டும். அவருடைய வயது, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையிலே அவற்றை கணிக்கவேண்டும். மொழிக் குறைபாடு காரணமாக நடைமுறையிலே அந்த நபருக்கிருக்கும் பாதிப்புகளைக் கண்டறியவேண்டும். மொழி குறைபாடு அவர் செயல்பாடுகளை எந்த அளவு பாதிக்கிறது என்பது கணக்கிடப்படவேண்டும். அப்படி கணக்கிடவேண்டுமென்றால் அவருடைய சமூகத் தொடர்புகள் உற்று கவனிக்கப்படவேண்டும், படிப்பு மற்றும் வேலை ஸ்தலத்தில் அவரது செயல்திறன் எப்படியுள்ளது என்று பார்க்கவேண்டும். அந்த நபரையோ அவரது குடும்பத்திலொருவரையோ விசாரித்துப் அறியவேண்டும். பரிசோதனையில் கண்டறியப்படும் மதிப்பெண்கள் குறைவாக இருந்தாலும், மொழித்திறன் குறைபாட்டினால் அவரது அன்றாட வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது என்று கண்டறியப்பட்டாலும் அவருக்கு ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ இருக்கிறது என்று புரிந்துகொள்ளலாம். ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ உள்ளவர்களுக்கு வேறு குறைபாடுகளும் இருக்கலாம். ஆகவே, அவர்கள் தங்கள் கை கால்களை பயன்படுத்தும்விதம், மற்றும் கூர்ந்து கவனிக்கும் திறன் போன்றவை எவ்வாறு உள்ளன என்பதையும் கண்டறியவேண்டும்.
- சிகிச்சைகள்மூலம் இடைபடுதல் (**Intervention**): சிகிச்சைகள் பயனளிக்கவேண்டுமானால், அவை தரத்தில் உயர்ந்தவையாயும், போதிய கால அளவு கொண்டவையாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நல்ல சிகிச்சை முயற்சிகளின் எண்ணிக்கை இப்போது வளர்ந்துவருகிறது. மொழி மற்றும் பேச்சு சிகிச்சையாளர்களும் ஆசிரியர்களும் அல்லது உதவி ஆசிரியர்களும் இணைந்து செயல்படுத்தும் சிகிச்சை முயற்சிகள் ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ உள்ளவர்களின் சொல் ஆற்றல், பேச்சுத் திறன், ஒலிகளை பயன்படுத்தும் திறன் ஆகியவற்றை அதிகரிக்கும். மிகக் கடுமையான ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு” உள்ள குழந்தைகளுக்கு பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்கள் சிறப்பு சிகிச்சைமுறைகளை ஏற்பாடு செய்யலாம்.

‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’**:** பொது மக்களின் அங்கீகாரமும் விழிப்புணர்வு பிரச்சார முயற்சிகளும் **(DLD: Public recognition and the RADLD campaign):**

- ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டியதன் தேவை: ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு மிகக் குறைவாகவே இருக்கிறது. இதனால், மருத்துவரீதியான அடையாளம்காணுதலும் ஆராய்ச்சிகளும் குறைவாகவே உள்ளன. ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ விழிப்புணர்வு பிரச்சார முயற்சிக்குழுவின் அங்கத்தினர்கள் ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ குறித்த விழிப்புணர்வை வளர்க்க யூ ட்யூப் (YouTube channel), வலைதளம் (Website), சமூக வலைதளங்கள் (Social media) போன்றவற்றை பயன்படுத்திவருவதோடு, வருடாந்திர ‘பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக் குறைபாடு’ விழிப்புணர்வு தினத்தையும் கடைபிடித்துவருகின்றனர்.